
'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XVII ஆகஸ்ட் கி.பி. 2026 சான்று : 200




புதிய பணியாளர்கள் பயிற்சி - சிவகங்கை மறைவட்டம்
அமலவை அன்னை அமைதியகம்
அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை
அருள்சான்று நிலையம்

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

நேர்மையுடன் நடக்கும் என் அடியார் நம்பிக்கையினால் வாழ்வடைவார். எவராவது பின்வாங்கி செல்வார் என்றால் அவரில் நான் மகிழ்ச்சியுறேன். நாமும் பின் வாங்கிச் சென்று அழிவுறுவோர் அல்ல. மாறாக நம்பிக்கையையும் வாழ்வையும் காத்துக் கொள்வோர் ஆவோம் (எபி 10:38,39) என்று எபிரேயருக்கு எழுதப்பட்ட மடலிலே, அதன் ஆசிரியர் மிக தெளிவாக சொல்லி இருக்கிறார். இதைவிட திட்டமும் தெளிவுமாகச் சொல்லவே முடியாது. நாம் யாரும் பின்வாங்கி செல்லாமல் இருக்க உங்களை வாழ்த்துகிறேன், செபிக்கிறேன்.

இந்த இதழ் வழியாக மீண்டும் உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இதுவரை 15 வட்டாரங்களில் சீராய்வு தியானம் மிகச் சிறப்பாக நடந்தேறி இருக்கிறது.

சென்ற இதழ்களில் ஆபிரகாமின் அர்ப்பணம், இயேசு கிறிஸ்துவின் தாய் அன்னை மரியாளின் அர்ப்பணம், பேதுரு மற்றும் அந்திரேயாவின் அர்ப்பணம் பற்றி மிக சுருக்கமாகச் சிந்தித்தோம். இந்த இதழில் புனித பவுலடியாரின் அர்ப்பணம் பற்றி சிந்திப்போம்.

**புனித பவுல்:** புனித பவுலடியாரின் வாழ்க்கை முழுவதும், கிறிஸ்துவுக்கான முழு அர்ப்பணிப்பின் சாட்சியாக இருந்தது. இவர் யூத மதத்தில் மிக ஆழமான பற்று கொண்டவராக, யூத மதத்திற்கு எதிரானவர்களை அடித்து, துன்புறுத்தி கொலை செய்வதைத் தனது கடமையாக, கடவுளுக்குச் செய்யும் பணியாக நினைத்து செயல்பட்டவர். அப்படி செயல்பட்ட வரை, கிறிஸ்தவர்களைக் கைது செய்ய, துன்புறுத்த தலைமைச் சங்கத்திடம் கடிதம் பெற்று தமஸ்குவிற்கு செல்லும் வழியில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து சந்தித்தார். 'சவுலே!, சவுலே! ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?' என்று கேட்டபோது 'ஆண்டவரே, நீர் யார்?' என்று பவுல் கேட்டார். அதற்கு ஆண்டவர், 'நீ துன்புறுத்தும் இயேசு நானே' என்று சொல்லி பவுலை அழைத்தார் (திப 9:1-6). அன்று முதல் கடவுளின் திருவுளப்படி வாழ தம்மையே அர்ப்பணித்தார். இந்நிகழ்வு பவுலின் வாழ்க்கையைத் தலைகீழாக புரட்டிப் போட்டது. அந்த தலைகீழ் மாற்றம் நிலை பெற்றது. அவரைச சிறந்த திருத்தூதர் ஆக்கியது.

**1. கிறிஸ்துவுக்காக அனைத்தையும் இழந்தார்:** தனது செல்வ செழிப்பு, செனகரிப் சங்க உறுப்பினர் பதவி, அன்றைய சிறந்த, ஒப்பற்ற, நடமாடும் பல்கலைக்கழகமான கமாலியேலிடம் பெற்ற திருச்சட்ட அறிவு பற்றிய பெருமை போன்ற அனைத்து பெருமைகளையும் குப்பை எனக் கருதி, எல்லாவற்றையும், அதாவது தனக்கு ஆதரவாக இருந்த அனைத்தையும் இழப்பாகக் கருதி (பிலி 3:7,8) தன் வாழ்வை அர்ப்பணித்தார். 'நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே. நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே' (பிலி 1:21) என்று தெளிவாக, உறுதியாக கூறி வாழ்ந்து காட்டினார். நாம் எதைக் குப்பையாக, எதை இழப்பாக கருதுகிறோம்?. நமது அர்ப்பணிப்பின் தன்மை என்ன? அதன் நிலை என்ன?

**2. நற்செய்தி அறிவிப்பில் இடைவிடாத ஆர்வம்:** இன்று நமக்கு பல்வேறு அறிவியல் கருவிகள் வந்து விட்டன. போக்குவரத்திற்கு தரை, கடல், வான்வழி போக்குவரத்து சாதனங்கள் வந்துவிட்டன. உலகம் சுருங்கிவிட்டது. சமூக வலைதளங்கள் பெருகிவிட்டன. ஒரு நொடியில் உலகில் கடைக்கோடி நபரிடமும் உடனடியாக தொடர்புகொள்ள முடிகிறது. ஆனால் புனித பவுலடியார் காலத்தில் எவ்வித வசதியும் இல்லை. அது மட்டும் இருந்திருந்தால் அவர் உலகம் முழுவதும் சுற்றி வந்து நற்செய்தி அறிவித்திருப்பார். உலகம் முழுவதையும் கிறிஸ்துவுக்கு ஆதாயம் ஆக்கி இருப்பார். புனித பவுலடியார் நற்செய்தியை பறைசாற்ற தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். அப்பயணங்கள்தான் திரு அவை வளர்ச்சிக்கு வித்திட்டன என்றால்

அது மிகையாகாது. முதல் தூதுரைப் பயணமாக (கிபி 46-48, திப 13,14 பிரிவுகள்) பர்னபா, மாற்கு ஆகியோருடன் அப்ரோச்கியா (சிரியா) சைப்ரஸ் (சலமிஸ், பாபோஸ்) பெர்சா, பிசிதிய அந்தியோகியா, இக்கோனியம், லிஸ்திரா, தெர்பே ஆகிய இடங்களுக்குச் சென்றார். இரண்டாம் தூதுரை பயணமாக (கிபி49-52,திப 15:36-18:22) சீலா, தீமோத்தேயு, லூக்கா ஆகியோருடன் லிஸ்திரா, பிலிப்பி, தெசலோனிக்கா, பெரேயா, ஏதென்ஸ், கொரிந்து ஆகிய இடங்களுக்கு சென்றார். மூன்றாம் தூதுரைப் பயணமாக (கிபி 53-57, திப 18:23-21:17) கலாத்தியா, பிரிகியா, எபேசு, மக்கதோனியா, கொரிந்து, மிலேத்து, எருசலேம் ஆகிய இடங்களுக்குச் சென்றார். நான்காவது பயணமாகக் கைதியாக உரோமைக்கு சென்று, வீட்டு காவலில் இருந்தபடியே நற்செய்தி அறிவித்தார். இதற்கிடையில் பல்வேறு கடும் துன்பங்களால் துயறுற்றார். சிறைகளில் இருந்தபடியே, தான் நற்செய்தி அறிவித்த இடங்களுக்குக் கடிதங்களை எழுதி உற்சாகப்படுத்தினார்; கண்டித்தார்; திருத்தினார். 'என்னைப் பொறுத்தவரையில் எனது உயிரை ஒரு பொருட்டாக நான் மதிக்கவில்லை. இறையருளைப் பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு ஆண்டவர் இயேசு எனக்கு கொடுத்த பணியை நிறைவேற்றி என் வாழ்க்கை ஓட்டத்தை முடிப்பதே என் விருப்பம்' (திப 20:24) என்று தெளிவாக பறைசாற்றி, தன் வாழ்வை முடித்தார். பல நாடுகளுக்குச் சென்று சபைகளை நிறுவினார். துன்பங்களையும், சிறைகளையும், பல்வேறு பாடுகளையும் சகித்தார். நமது அர்ப்பண நிலை என்ன?

**3. துன்பங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்:** கிறிஸ்துவுக்காக பல்வேறு துன்பங்களை, பாடுகளை ஏற்றுக்கொண்டார் (2கொரி 11:23-28). அவர் பட்ட பாடுகளில் நிச்சயமாக ஒன்றுகூட நாம் பட்டிருக்க மாட்டோம். மேலே குறிக்கப்பட்டுள்ள புனித பவுலின் கடிதப் பகுதியை தியானத்தோடு வாசித்துப் பார்ப்போம். என் வலுவின்மையிலும், இகழ்ச்சியிலும், இடரிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அக மகிழ்கிறேன். ஏனெனில், நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன் (2கொரி 12:10) என்று புனித பவுல் மிக உறுதியாக கூறுவதை உணர்ந்து பார்ப்போம். நமது அர்ப்பண நிலை என்ன?

**4. திரு அவையின் மீது மாறாத அன்பு:** தான் நிறுவிய அனைத்து சபைகளுக்காக இடைவிடாமல் இறைவேண்டல் செய்து, அவர்களுக்கு அறிவுரைகளும் ஊக்கமும் அளித்தார் என்பதை அவரது திருமடல்களை வாசிக்கும் போதே நம்மால் புரிந்து கொள்ள முடியும். 'எல்லா திருச்சபைகளைப் பற்றிய கவலை எனக்கு அன்றாடச் சுமையாக இருந்தது' (2 கொரி 11:28)என்று எழுதுகிறார் பல மடல்களில் உங்களுக்காக நான் தொடர்ந்து இறைவேண்டல் செய்து வருகிறேன் என்று எழுதியிருக்கிறார். நமது அர்ப்பணம் நிலை என்ன?

**5. இறுதி வரை அசைக்க முடியாத நம்பிக்கை:** 'நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தை காத்துக் கொண்டேன்' (2திமொ 4:7) என்று மிகவும் தெளிவாக கூறுகிறார். இறுதிவரை அதை நிறைவேற்றி, மறை சாட்சியாக தன் உயிரை அர்ப்பணித்தார். நமது அர்ப்பணத்தின் நிலை என்ன?

புனித பவுலடியாரின் அர்ப்பணம்' இனி வாழ்பவன் நான் அல்ல. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் (கலா 2:20) என்ற வார்த்தைகளில் உச்சத்தை அடைகிறது. அவருடைய வாழ்க்கை முழுமையான கிறிஸ்தவ அர்ப்பணிப்பின் சிறந்த முன்மாதிரியாக இன்றும் விளங்குகிறது. நமது அர்ப்பண வாழ்வை சுய ஆய்வு செய்து தெளிவடைவோம். சீராய்வு தியானத்திலே கொடுத்த வாக்குறுதிகளை நம் வாழ்நாளின் இறுதிவரை நிறைவேற்ற முழு முயற்சி எடுப்போம். கடவுளின் உதவியை தொடர்ந்து நாடுவோம். ஒருவர் மற்றவருக்காக தொடர்ந்து இறைவேண்டல் செய்வோம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 05.07.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 16 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி A. யூஜின் அமல்ராஜ், நற்பணி V. செங்கோல்மேரி, நற்பணி P. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - II தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 11.07.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 12 பேரும் இரண்டாவது குழுவில் 19 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி G.M.S. ராணி, நற்பணி X. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - III பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 12.07.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 8 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி.G. பிரான்சிஸ் சேவியர், நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், A. அடைக்கலம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை ஆலயத்தில் 12.07.2026 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 12.07.2026அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 6 பேரும் இரண்டாவது குழுவில் 13 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி V. செங்கோல்மேரி, நற்பணி R. ஆரோக்கியசாமி, நற்பணி G. பிரான்சிஸ் சேவியர், நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 12.07.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 6 பேரும் இரண்டாவது குழுவில் 3 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி கோ. அம்பிகா எலியாஸ், நற்பணி S. ஆரோக்கியசாமி, நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 19.07.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 6 பேரும் இரண்டாவது குழுவில் 18 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி, நற்பணி. X. சகாய லூயி, நற்பணி L. ஆரோக்கியசாமி, சகோதரி சவரியம்மாள் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 19.07.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 5 பேரும் இரண்டாவது குழுவில் 21 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி T. ஸ்டீபன், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X சி.கே. மங்கலம், புனித பேதுரு ஆலயத்தில் 19.07.2026 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி A. தமிழ் செல்வி, நற்பணி A. ஜான்சிமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 26.07.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 5 பேரும் இரண்டாவது குழுவில் 5 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

✱01.07. 2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 33 பேர் இணைந்து செபித்த இப்பயிற்சியை நற்பணி S. சகாயராணி, நற்பணி K. குளோரி, நற்பணி அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱01.07.2026 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 65 பேர் இணைந்து செபித்த இப்பயிற்சியை நற்பணி சந்திர புஷ்பா, நற்பணி ரூத் செல்வராணி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱05.07. 2026 அன்று கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. விசுவாசம், நற்பணி. S. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱11.07.2026 அன்று மாந்தை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. விசுவாசம், நற்பணி A.R.சூசைராஜ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱12.07.2026 அன்று புதுக்கோட்டை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியைநற்பணி G.M.S. ராணி, நற்பணி தை. அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱12.07.2026 அன்று பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. அந்தோனி பிரகாஷ், நற்பணி A. ஆரோக்கியசாமி அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✱12.07.2026 அன்று பட்டுக்கோட்டை, உலக இரட்சகர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி S. இராஜேந்திரன் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✱10,11 & 12.07.26 ஆகிய தேதிகளில் அருள்சான்று நிலையத்தில் ஆண்டுதியானம்-I நடைபெற்றது. 98 பேர் கலந்து கொண்ட இத் தியானத்தை அருள்பணி ரூபன் SDB சகோதரி விமலா ராணி ISONE ஆகியோர் செய்தி வழங்கி வழிநடத்தினர்

✱18.07.2026 அன்று மங்களபுரம், புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி M. லூயிஜான்போஸ்கோ அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✱19.07. 2026 அன்று தஞ்சாவூர், திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி M. விசுவாசம் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✱19.07.2026 அன்று மன்னார்குடி, புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி தை. அமல்ராஜ், நற்பணி S. கோ. அம்பிகா எலியாஸ் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✱19.07. 2026 அன்று அம்மாபேட்டை, புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி, S. அந்தோனி பிரகாஷ், நற்பணி A. ஆரோக்கியசாமி அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✱24,25&26.7.26 ஆகிய தேதிகளில் அருள்சான்று நிலையத்தில் ஆண்டுதியானம்-II நடைபெற்றது. 68 பேர் கலந்து கொண்ட இத் தியானத்தை அருள்பணி ரூபன் SDB சகோதரி விமலா ராணிISONE ஆகியோர் செய்தி வழங்கி வழிநடத்தினர் .

✱26.07.2026 அன்று திருவாரூர், புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி J. அருள் இளங்கோ அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✱26.07.2026 அன்று நமணசமுத்திரம், குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி V. செங்கோல்மேரி, நற்பணி S. சகாயராணி அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

# இயேசுவின் அன்பு

கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளம் அன்பு. கடவுள் அன்பாய் இருக்கிறார் என்ற வார்த்தைக்கு மிகச் சிறந்த இலக்கணமாக விளங்குவது இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை.

**1. தியாக அன்பு :** இயேசுவின் அன்பு வெறும் வார்த்தைகளால் ஆனது அல்ல. அது செயலில் காட்டப்பட்ட தியாக அன்பு. மனிதகுலம் பாவத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதற்காகத் தம் உயிரையே கொடுக்கும் அளவிற்கு அவர் நம்மை அன்பு செய்தார். "கடவுள் உலகின்மேல் எவ்வளவு அன்பு கூர்ந்தார் எனில், தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அவரை அளித்தார்" (யோவான் 3 : 16). இறைவன் மனிதனாக உருவெடுத்து, சிலுவையில் தம் இரத்தத்தை சிந்தி, தன் உயிரையே நமக்காகக் கையளித்ததே அந்த தியாக அன்பின் உச்சகட்டமாகும்.

**2.தேடி வந்து மீட்கும் அன்பு :** இயேசுவின் அன்பு தகுதியைப் பார்த்து வருவதல்ல. பாவிகளையும், சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களையும் அவர் தேடிச்சென்று அன்பு செய்தார். "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்"(லூக் 5:31-32). இழந்துபோன ஆட்டை தேடிச்செல்லும் நல்ல ஆயனைப்போல, வழி தவறி போன மனிதர்களைத் தேடி வந்து மீட்கும் அன்பாக இயேசுவின் அன்பு இருந்தது. சக்கேயு, சமாரியப் பெண், விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் போன்ற பலரின் வாழ்க்கையை இயேசுவின் தேடி வந்த அன்பு தான் மாற்றியமைத்தது.

**3. மன்னிக்கும் அன்பு :** இயேசுவின் அன்பின் மிக முக்கியமான பரிமாணம் "மன்னிப்பு". தவறுகளைக் கணக்கில், கொள்ளாமல் எத்தனை முறை தவறு செய்தாலும் மன்னிக்கத் தயாராக இருக்கும் அன்பு அவருடையது. சிலுவையில் தொங்கி, மரண வேதனையை அனுபவித்த அந்த நொடியிலும் தம்மைக் கொடுமைப் படுத்தியவர்களுக்காக, "தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23:34) என்று வேண்டினார். இது அவரது மன்னிக்கும் அன்பை வெளிக்காட்டுகிறது.

**4. ஆறுதலும் அமைதியும் தரும் அன்பு :**உலகப் போராட்டங்களால் சோர்வடைந்து, பாரம் சுமப்பவர்களுக்கு இயேசுவின் அன்பு ஒரு புகலிடமாக விளங்குகிறது. "சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்தேயு 11:28). அவரது அன்பு நமக்கு உலகத் துயரங்களிலிருந்து விடுதலையையும், உள்ளத்தில் ஆழமான அமைதியையும் தருகிறது. "அமைதியை உங்களுக்கு விட்டு செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு தருகிறேன்.

உலகம் தரும் அமைதி போன்றதல்ல நான் தரும் அமைதி" (யோவான் 14 : 27) என்ற வார்த்தைகள் துயரங்களில் இருப்போரை அவரது அன்பு அரவணைக்கின்றது என்பதை உணரலாம்.. இயேசுவின் தெய்வீக அன்பை நாமும் நம் வாழ்வில் அனுபவித்து, தியாகத்தோடும் மன்னிக்கும் மனப்பான்மையோடும் பிறரிடம் அன்பு செலுத்தும்போது, நாமும் இயேசுவின் உண்மையான சீடர்களாக மாறுவோம்.

நற்பணி **அமல்ராஜ்**

| **வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்** | |
|---|---|
| தாவீது, "என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த ஆண்டவர் இந்தப் பெலிஸ்தியனின் கைக்கும் தப்புவிப்பார்" என்றார். | **1 சாமுவேல்** 17:37 |

அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார் (மாற் 16:29).
இன்றைக்கு எங்கேயாவது அற்புதங்கள் நடக்குமா? என்று தேடி அலைகிற உலகில் நாம் வாழ்கிறோம். எந்த மனிதரும் செய்ய இயலாத இயற்கைக்கு அப்பாற்பட்ட அரும் அடையாளங்களைச் செய்யக்கூடிய கடவுள் நம்மோடு இருக்கிறார். பழைய ஏற்பாட்டில் 87 அற்புதங்கள், புதிய ஏற்பாட்டில் 46 அற்புதங்கள் நடந்துள்ளன. ஒவ்வொரு அற்புதத்திற்குப் பின்னால் கடவுள் இருந்தார். இன்று ஒரு இடத்திலிருந்து உலகில் கடைக்கோடியில் உள்ள மனிதனிடம் பேசுவது மட்டுமல்ல முகமுகமாக பார்த்து விசாரித்து கொள்ள முடிகிறது. வேற்றுக் கிரகங்களில் மாயைகளில் குடியேற மனிதன் முயற்சி செய்கிறான். ஆனால் முடியவில்லை ஏன்? ஒரே ஆணிலிருந்து கடவுள் மக்களினம் அனைத்தையும் படைத்து அவர்களை மண்ணுலகின் மீது குடியிருக்கச் செய்தார். அவர்களுக்குக் குறிப்பிட்ட காலங்களையும் குடியிருக்கும் எல்லைகளையும் வரையறுத்துக் கொடுத்தார் (திப17:26). அப்படியானால் மனிதன் வாழ்வதற்கு தேவையான சுவாச காற்று மண்ணுலகில்தான் உள்ளது. ஆனால் இன்றைக்கு இயற்கைக்கு மாறாக எதை எதையோ கண்டுபிடித்து விட்டதாக தன் சுய அறிவைக் கொண்டு பெருமை கொள்கிறார்கள். இந்த கண்டுபிடிப்புகள் எல்லாம் கடவுள் அற்புதமாகப் படைத்து உருவாக்கித் தந்த இயற்கையை ஒவ்வொருவரும் அழித்துக் கொண்டிருக்கிறது. நாம் சிறுவயதில் கண்டு மகிழ்ந்த எத்தனையோ சிறிய பறவை இனங்கள் காணாமல் போய்விட்டன. காட்டு விலங்குகள் தனது வாழ்வாதாரத்தை இழந்திருக்கின்றன. இவைகளைக் கண்டு உலக மனிதர்கள் இது மாபெரும் அற்புதம் என்று பெருமை கொள்கிறார்கள். ஆனால் கடவுள் செய்த அற்புதங்கள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கையோடு தொடர்புடையது. இஸ்ரயேல் மக்களை எகித்தியரிடமிருந்து காப்பாற்றச் செங்கடலை இரண்டாகப் பிரித்தார்; அவர்கள் கானான் நாட்டிற்குச் சென்று சேரும் வரை பல அரும் அடையாளங்கள் நடந்தன. அவை எந்த மனிதனாலும் செய்ய முடியாதவையாக இருந்தன. எமோரியரை இஸ்ரயேலரின் கையில் ஒப்படைத்தபோது போரில் அவர்கள் எதிரியின் மீது வஞ்சம் தீர்க்கும் வரை கதிரவனும் நிலாவும் அசையாது நின்றன. கதிரவன் ஒருநாள் முழுவதும் நடுவானில் நின்றது. அதற்கு முன்னும் பின்னும் அது போன்ற அடையாளம் நடந்ததில்லை (யோசு 10 : 12-14). புதிய ஏற்பாட்டில் கானாவூர் திருமண வீட்டில் நடந்த முதல் அரும் அடையாளம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது (யோ 2:11). ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவு கொடுத்தார். இதுவரை யாரும் செய்ய முடியாத மாபெரும் செயலை செய்திருக்கிறாரே என்று அவர்மீது நம்பிக்கை கொள்ளாமல் மறுநாளும் அதே உணவுக்காக அவரைத் தேடி வந்தார்கள். அவர்களைப் பார்த்து அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம் என்றார் (யோ 6 : 26-27). இறந்த இலாசாரை நான்கு நாட்கள் கழித்து ஆண்டவர் உயிரோடு எழுப்பினார். அப்போது அங்கு வந்த யூதர் பலர் அதை நம்பினர். ஆனால் அவர்களுள் சிலர் பரிசோயரிடம் சென்று தலைமைச் சங்கத்தைக் கூட்டி இந்த ஆள் பல அரும் அடையாளங்களைச் செய்து கொண்டிருக்கிறானே என்றார்கள்.
பல ஆண்டுகளாகத் திருச்சட்டம் படித்து ஆலயத் தலைமைப் பொறுப்புகளில் இருந்தார்கள். செய்ய முடியாத செய்திராத பல அரும் அடையாளங்களை ஆண்டவர் செய்தார். இது அவர்களுக்குத் தெரிகிறது. ஆனால் அவரை நம்பி அவரை ஏற்றுக் கொள்ள அவர்களால் முடியவில்லை (யோ 11:45-47) அவரை நம்பாமல், வெறும்

அரும் அடையாளங்களை மட்டும் தேடி அலைபவர்களைப் பார்த்து, அடையாளங்களையும் அரும் செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் என்னை நம்பமாட்டீர்கள் என்று கடிந்து கொண்டார் (யோ 4:48). பன்னிரு சீடர்களையும் ஒன்றாய் வரவழைத்து பேய்களையெல்லாம் அடக்கவும் பிணிகளைப் போக்கவும் வல்லமையும் அதிகாரமும் அவர்களுக்குக் கொடுத்தார் (லூக் 9:1). அவர்கள் எப்படி அரும் அடையாளங்களைச் செய்தனர்? அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினார். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார் (மாற் 16:2). இங்கு ஒவ்வொரு அரும் அடையாளங்களுக்குப் பின்னும் ஆண்டவர் உடனிருந்து நாம் பேசுகின்ற அவரது வார்த்தையை உறுதிபடுத்துகிறார் என்பதை அறிந்து கொள்வோம். ஆண்டவர் சீடர்களுக்கு அதிகாரம் கொடுத்தது மட்டுமல்ல நாம் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார் ஏன் அவற்றைவிட பெரியவற்றையும் செய்வார் என்றார் (யோவா 14:12). எனவே பல இறை அனுபவங்களைப் பயிற்சியாகப் பெற்றுள்ள நாமும் அரும் அடையாளங்களைத் தேடி அலையாமல் இயற்கைக்கு அப்பாற்பட்ட அரும் அடையாளங்களையும் ஆற்றல்மிகு செயல்களையும் செய்யக்கூடிய ஆண்டவர் நம்மோடு இருப்பதை நம்புவோம். புனித பவுல் நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுள் என்று குறிப்பிடுகிறார் (எபே 3:20-21). நாம் வழிபடும் நம் கடவுள் எங்கோ சென்று நாம் தேடி கண்டுபிடிக்கும் கடவுள் அல்ல. மாறாக அவர் நம்முள் இருந்து கொண்டு வல்லமையோடு செயலாற்றும் கடவுள் இந்த உண்மையை உணர்ந்தவர்களாக அவர் வார்த்தையின்மீது நம்பிக்கை வைப்போம். நாள்தோறும் சீடர்களைப் போல அதை அறிக்கை செய்வோம். சீடர்களோடு உடனிருந்த செயல்பட்ட ஆண்டவர் நம்மோடும் உடனிருந்து செயல்படுவதைக் காண்போம்.

நற்பணி **M. விசுவாசம்**



## ஒரு பணியாளரின் மன்றாட்டு



நான் உனக்கு அறிவு புகட்டுவேன்; நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் (திபா 32:8)என்றவரே இறைவா!

செலவு செய்வதில் போட்டியும்,ஆடம்பரத்திற்கு ஆதரவும் தருவதுதான் திருவிழா என்பதை மாற்றி எதிரிகளுக்கு மன்னிப்பையும் (மாற 11:25)அருகிருப்போருக்கு அன்பையும், உதவியும் கொடுப்பது தான்(யோ 2:7) உண்மையான திருவிழா என்பதை உணர்ந்து அதைத் தினமும் கொண்டாடும் மனநிலை தர வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறேன்.

உலகம் அனைத்தையும் ஆண்டவருடைய கண்கள் சுழன்ற பார்க்கின்றன. ஆகையால்தான் சாராயின் கொடுமையிலிருந்து தப்பியோடிய ஆகாரை ஆண்டவருடைய கண்கள் கண்டன. அப்பொழுது 'என்னைக் கண்டவரை நானும் கண்டேன்' என்று சொல்லி தன்னுடன் பேசிய ஆண்டவரை 'காண்கிற இறைவன் நீர்' என்று பெயரிட்டழைத்தார் (தொநூ 16:13). போகும் இடம் எது என்று தெரியாது. சாகும்வேளை எது என்று அறியாது பாலைவனத்திலே வாடி வதங்கி நாடி தளர்ந்து நடந்து கொண்டிருந்தபோது ஆகாரே என்று பெயர் சொல்லி அழைத்து போகாதே என்று தடுத்து சாகாத மறு வாழ்வைக் கொடுத்து அந்த வாழ்விற்கு வளம் சேர்த்தவர் இந்த 'காண்கிற இறைவன் அமித்தாயின் மகனாகிய யோனாவே என்று பெயரைச் சொல்லி அழைத்தது மாத்திரமல்ல. கீசன் மகன் சவுல் பொருட்குவியலிடையே ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று அவன் இருந்த இடத்தைக் கண்டு அறிவித்தது மாத்திரமல்ல. மோசேயிடம் உன் சகோதரன் ஆரோன் நன்றாகப் பேசுகிறவன் என்று ஒவ்வொரு மனிதரையும் அறிந்து காண்கிறவர் நம் இறைவன். 'என் கண்ணில் படாதபடி எவராவது பதுங்கிடங்கில் ஒளிந்துகொள்ள முடியுமா?' என்கிறார் ஆண்டவர். விண்ணிலும் மண்ணிலும் நிறைந்திருப்பது நான் அல்லவா? என்கிறார் ஆண்டவர் (ஏரே 23:24)

அ) தாவீது அரசர் பாவம் செய்தபோது. ஆண்டவர் அதனைக் கண்டார். ஆகவே நாத்தானை தாவீதிடம் அனுப்பினார். அப்பொழுது நாத்தான் கூறியது 'நீ ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்து அவர்தம் பார்வையில் தீயது செய்தாய்? இத்தியன் உரியாவை நீ வாளுக்கு இரையாக்கி, அவன் மனைவியை உன் மனைவியாக்கிக் கொண்டாய். அம்மோனியரின் வாளால் அவனை மாய்த்துவிட்டாய். இனி உன் குடும்பத்தினின்று வாள் என்றுமே விலகாது. உன் குடும்பத்தினின்றே நான் உனக்குத் தீங்கை வரவழைப்பேன். உன் கண்கள் காண உன் மனைவியரை உனக்கு அடுத்திருப்பவனிடம் ஒப்புவிப்பேன். அவன் பட்டபகலில் உன் மனைவியரோடு படுத்திருப்பான். நீ மறைவில் செய்ததை அனைத்து இஸ்ரேயேலும் காணுமாறு நான் பட்டபகலில் நிகழச் செய்வேன்' என்று கூறினார் (2 சாமு 12:9). ஆண்டவருடைய கண்கள் தன்னைக் கண்காணிப்பதை உணர்ந்த தாவீது 'ஆண்டவரே. நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கின்றீர். நான் அமர்வதையும் எழுவதையும் நீர் அறிந்திருக்கின்றீர். என் நினைவுகளை எல்லாம் தொலையிலிருந்து உய்த்துணர்கின்றீர். நான் நடப்பதையும் படுப்பதையும் நீர் அறிந்துள்ளீர் என் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தவையே. நான் வானத்திற்கு ஏறிச் சென்றாலும் நீர் அங்கே இருக்கின்றீர்? பாதாளத்தில் படுக்கையை அமைத்துக் கொண்டாலும் நீர் அங்கேயும் இருக்கின்றீர் (திபா 139:1-10) என்கிறார். ஆகையால் கடவுளின் கண்களிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பதை அறிந்து கொண்டார்.

ஆ) நினிவே நகர மக்களின் தீச்செயலை கண்டு. கடவுள் நினிவே நகரம் முழுவதையும் அழிக்கப்போவதை அறிந்த அரசரும், அரச அவையினரும். மக்களும் சாக்கு உடை உடுத்தி சாம்பலில் அமர்ந்து உண்ணாமலும், குடியாமலும் இருந்து கடவுளை நோக்கி மன்றாடினர். 'கடவுள் அவர்கள் செய்த அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளின்று விலகியதை அவர் கண்டு, தம் மனதை மாற்றிக் கொண்டார். தாம் அவர்கள் மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை (3:10).

இ) எசேக்கியா நோயுற்று சாகும் தருவாயில் இருந்தபோது, இறைவாக்கினர் ஏசாயா மூலம் ஆண்டவர் கூறியது. நீர் உமது வீட்டு காரியங்களை ஒழுங்குப்படுத்தும் ஏனெனில் நீர் சாவது உறுதி என்றார். அப்பொழுது எசேக்கியா சுவர் பக்கமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு ஆண்டவரை நோக்கி கதறி அழுதார். ஆண்டவர் அவரது மன்றாட்டைக் கேட்டு, உன் கண்ணீரை கண்டேன் (2 அர 20:5) என்று

சொல்லி அவரது ஆயுளில் 15 ஆண்டுகளை கூட்டி அவரைப் பாதுகாத்தார். ஏனெனில் அவரின் விழிகள் மனிதரின் வழிகள் மேல் உள்ளன. அவர்களின் அடிச்சுவடுகளை அவர் காண்கிறார் (யோபு 34:20) ஒவ்வொரு மனிதரையும் தனிப்பட்ட முறையில் அவரே கண்காணிக்கிறார் (யோபு 34:29).

நம் செயல்கள் மட்டுமல்ல, நம் சிந்தனைகளையும் அவர் அறிந்திருக்கிறார். நம் உள்ளத்தில் மறைந்திருக்கும் நினைவுகள் அனைத்தையும் அறிந்திருக்கிறார். 'பாதாளமும் படுகுழியுமே ஆண்டவர் பார்வையில் இருக்க, மனிதரின் உள்ளம் அவர் பார்வைக்கு மறைவாய் இருக்குமோ? (நீமொ 15:11). அவை மாந்தரின் வழிகளையெல்லாம் காண்கின்றன. மறைந்திருப்பவற்றை அறிகின்றன. அனைத்தும் படைக்கப்படும் முன்பே ஆண்டவர் அவற்றை அறிந்திருந்தார். அவற்றைப் படைத்து முடித்த பின்னும் அவற்றை அறிந்துள்ளார் (சீரா 23:19,20). படைப்பு எதுவும் கடவுளுடைய பார்வைக்கு மறைவாய் இல்லை.

மண்ணுலகம் மாசுகளால் நிறைந்து காணப்படுவது போல மனித உள்ளமும் பாவங்களால் நிறைந்து காணப்படுகிறது. நாம் உண்மையாய் நடப்பது போல காணப்பட்டாலும் நம்முடைய உள்ளான நோக்கங்கள் உண்மையானதாக இல்லை. இது நமக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஆண்டவர் ஒருவரே இதயச் சிந்தனைகளை ஆய்பவர், உள்ளுணர்வுகளைச் சோதித்து அறிபவர் (எரே 17:10) எல்லா வகையான தீய எண்ணங்களும் நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கின்றன. ஆனாலும் நம் உள்ளத்தைப் பற்றி நாம் அக்கறை கொள்வதில்லை. அது எப்படி செயல்படுகிறது என்பதைப் பற்றியெல்லாம் நாம் முழுமையாக அறிந்து கொள்ள முடிவதில்லை. ஏனெனில் அதனை நலமாக்க முடியாது. உள்ளம் அனைத்திலும் வஞ்சகம் மிக்கது (எரே 17:9). ஏனென்றால் கடவுளால் அழைக்கப்பட்ட தூயபவுல் 'நான் நன்மை செய்ய விரும்பினாலும் என்னால் தீமையைத்தான் செய்ய முடிகிறது. இத்தகையதொரு செயல்முறையை என்னுள் காண்கிறேன் (உரோ 7:21) என்கிறார். கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தாவீது 'ஆண்டவரை எப்பொழுதும் என் கண்முன் வைத்துள்ளேன் (திபா 16:8) என்று கூறியவர். தன்னை தூய்மையாக்கிக்கொள்ள தான் மேற்கொண்ட எல்லா முயற்சிகளிலும் தோல்வியே கண்டார். தன்னால் தூய்மையாக வாழ முடியாது என்ற உண்மையை உணர்ந்ததால் தூயவரிடமே சரணடைந்து 'கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும் (திபா 51:10) என்று உருக்கமாக வேண்டினார். ஏனெனில் தூய்மையற்ற உள்ளம் நம்மை கடவுளிடமிருந்து பிரித்துவிடும். தூய்மையின்றி எவரும் கடவுளைக் காணமுடியாது. (எபி 12:14) ஆகவே, நம்மை கண்காணிக்கும் கண்கள் உண்டு என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஆண்டவரை முழுமனதுடன் நம்பி அவர் கண்காணிக்கிறார் என்பதை உணர்ந்து, அவருக்கு பணிந்து நடக்கும் அனைவருக்கும் ஆற்றல் அளிக்கிறார் (2 குறி 16:9); ஆபத்து நேரத்தில் உதவி செய்கிறார் (எசே 9:3-6 விப. 14:15-20, 2 அர 19:34,35); துன்ப நேரத்தில் துணை நின்று பாதுகாக்கின்றார் (தொநூ 37:34, விப 23-25); மேலும், துன்பத்தை மேற்கொள்ள துணிவையும் ஆற்றலையும் கொடுக்கிறார். (தொநூ 22:1-14). ஏனெனில் அவர் 'யாவேயிரே' ஆண்டவர் அனைத்தையும் பார்த்துக்கொள்வார் (தொநூ 22:14). நம்மை குறித்து ஒரு நோக்கம் வைத்திருக்கிறார். நாம் அனைவரும் நிலைவாழ்வு பெறவேண்டும் என்பதே அவருடைய திட்டம். மறைநூலில் எழுதியுள்ளவாறு தம்மை நம்பி இருப்போருக்கு கடவுள் ஏற்பாடு செய்தவை. கண்ணுக்கு புலப்படவில்லை, காதுக்கு எட்டவில்லை, மனித உள்ளமும் அறியவில்லை (1கொரி 2:9). கடவுளுக்கு அஞ்சி நடப்போருக்கு அவர் ஏற்பாடு செய்து வைத்திருக்கும் நன்மை மிகப்பெரியது (திபா 31:19). ஆக, இவ்வுலகில் நாம் பரதேசிகளாக வாழ்ந்தாலும் நம்மை பரலோகத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் கண்கள் உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. காண்கிற இறைவன் நம்மை கண்காணித்துக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்'(எபே6:16).

கடவுள் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை உலகு சார்ந்த வெற்று வாழ்க்கையிலிருந்து நம்மை எவ்வாறு பிரித்து வைக்கின்றது என்பதைப் பற்றித்தான் தொடர்ந்து தியானித்து வருகின்றோம். ஆவிக்குரிய வாழ்வுக்கான போராட்டத்தில் நாம் சந்திக்கின்ற சவால்களையும், சோதனைகளையும், உலக கவர்ச்சிகளையும், கானல் நீர் போன்ற மாயைகளையும் மேற்கொள்வதற்கு வேண்டிய ஆற்றலையும், சக்தியையும், பலத்தையும் தருவது நமது நம்பிக்கை தான்.

சமீபத்தில் கவிதை ஒன்றைப் படித்தேன்'கற்றை கற்றையாக மனிதர்கள் மீது வைக்கும் நம்பிக்கையை விட, ஒற்றை நம்பிக்கையை இறைவன் மீது வையுங்கள். மனிதர்கள் மீதான நம்பிக்கை ஏமாற்றத்தில் முடிந்தாலும் இறைவன் மீதான நம்பிக்கை ஏற்றத்தில் தான் முடியும்.'இந்தக் கவிதை வரிகள் எனக்கு பிடித்திருந்தது. நான் எப்பொழுதெல்லாம் மனிதர்கள் மீது நம்பிக்கை வைத்து ஏமாந்து இருக்கிறேன் என்பதை நினைவூட்டியது. கடவுள் மீது நம்பிக்கை வைத்ததால் பெற்ற வெற்றிகளைக் குறித்து நன்றி கூற வைத்தது. இறைவன் மீது நாம் வைக்கும் ஒற்றை நம்பிக்கை நமக்கு எப்போதுமே ஏற்றத்தை மட்டும் தான் தரும். ஒரு போதும் ஏமாற்றத்தைத் தராது.

'எதிர்நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது' (உரோ5:5). நாம் பல நேரங்களில் நம் நம்பிக்கையை மனிதர்கள் மீது வைத்து தோற்றுப் போகின்றோம். 'மனிதர் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம் (திபா 118:8). மனிதர்களை நம்பி பல நேரங்களில் ஏமாற்றங்களையும், இழப்புகளையும் சந்தித்து இருப்போம். ஆனால், ஆண்டவரை நம்பி அவரிடம் தஞ்சமடையும்போது மட்டுமே நாம் நன்மைகளால் நிறைவடைந்து, நம்பியதை பெற்றுக் கொண்டிருக்கிறோம். உங்களைத்தான் நான் மலைபோல நம்பி இருக்கிறேன் என்று மனிதர் மனிதர்களிடம் சொல்வதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி மனிதர்களை நம்பி காரியங்களைத் தொடங்குகிறவர்கள் பல நேரங்களில் ஏமாற்றங்களையும், தோல்விகளையும், துயரங்களையும்தான் அனுபவித்திருக்கிறார்கள். தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிற அளவிற்குக்கூட இக்கட்டான சூழல்களில் தள்ளப்பட்டி ருக்கிறார்கள்.

'ஆண்டவர் கூறுவது இதுவே. மனிதரில் நம்பிக்கை வைப்போரும் வலுவற்ற மனிதரில் தம் வலிமையை காண்போரும் சபிக்கப்படுவர்' (எரே17:5) மனிதரில் நம்பிக்கை வைப்போரை ஆண்டவர் சபிக்கப்பட்டவராகக் கூறுகின்றார். நாம் ஏதாவது ஒரு வேலையை அலுவலகங்களில் முடிக்க வேண்டுமென்றால் எனக்கு இவரைத் தெரியும் ,அவரைத் தெரியும் அதனால் நான் இந்த காரியத்தை எளிதாகச் சாதித்து விடுவேன் என்று எண்ணிச் செய்தோமென்றால் நாம் திட்டமிட்டுச் செல்லும் காரியம் நமக்கு தோல்வியைத் தான் தரும். நாம் நம்பிச் சென்றவர் ஏதாவது சாக்கு போக்குச் சொல்லி கை விரித்து விடுவார். இந்த அனுபவத்தை நம்மில் பலர் சந்தித்திருப்போம்.

'உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்து விடு; அவரையே நம்பி இரு; அவரே உன் சார்பில் செயலாற்றுவார்' (திபா 37:5). நாம் எங்கு சென்றாலும் ,எதற்காகச் சென்றாலும் அந்த காரியத்தை ஆண்டவரிடம் ஒப்படைத்து விட்டு அவரை மட்டும் நம்பி இருந்தால் அவர் நம் சார்பாக செயலாற்றுவார். ஆண்டவர் நேரடியாக வந்து நமக்கு எதையும் செய்வதில்லை. மனிதர்கள் வழியாகத்தான் செயலாற்றுகின்றார். ஆண்டவர் தூண்டவில்லையென்றால் எந்த மனிதரும் நமக்கு உதவி செய்ய முடியாது. ஆண்டவர் தூண்டுவதால் தான் மனிதர்கள் நமக்காகச் செயல்படுகிறார்கள்.

இந்த அனுபவத்தை நான் பெற்றிருக்கிறேன். என் மகளை பெங்களூரில் நிமான்ஸ்

மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் அழைத்துச் சென்றிருந்தபோது சேர்க்கை கிடைப்பதற்கே இரண்டு நாளாகும் என்று பலர் பயமுறுத்தினார்கள். ஆனால், நானும் என் கணவரும் எங்கிருந்து எங்களுக்கு உதவி வரும் விண்ணையும் மண்ணையும் படைத்த ஆண்டவரே உம்மிடமிருந்து தான் எங்களுக்கு உதவி வரும் (திபா121:2) என்ற இறை வார்த்தையை இடைவிடாமல் அறிக்கையிட்டு செபித்து அவரையே நம்பியிருந்தோம். அன்றே அனுமதி கிடைத்தது. மறுநாள் என் மகளைச் சந்திக்க வந்த தலைமை மருத்துவர் என்னுடைய மேசைக்கு மதியம் ஒரு மணிக்கு மேல் வரும் எந்த விண்ணப்பத்தையும் அன்றைய நாள் சிகிச்சைக்காக நான் எடுக்க மாட்டேன். ஆனால் உங்களுடைய விண்ணப்பத்தை எடுக்க வேண்டும்போல் எனக்குத் தோன்றியது. அதனால் உங்களுக்கு உடனே சேர்க்கை வழங்கினேன் என்று கூறினார். எந்த மனிதரையும் ஆண்டவர் தூண்டவில்லை என்றால் எந்த மனிதராலும் நமக்கு எந்த உதவியும் கிடைக்காது. யாரும் நமக்காக நின்று செயல்பட மாட்டார்கள்.

'ஆண்டவரிலே மகிழ்ச்சி கொள் உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார் (திபா37:4). ஆண்டவரையே நம்பி அவரில் மகிழ்ச்சி கொண்டு வாழ்வோம். அவர் கண்டிப்பாக நம் உள்ளத்து விருப்பங்களை நிறைவேற்றுவார். எதிர்நோக்கு ஒருபோதும் நமக்கு ஏமாற்றம் தராது என்பதை நம்பி ஆவிக்குரிய வாழ்வில் அலகையின் சவால்களையும், சோதனைகளையும் நம்பிக்கை என்னும் கேடயத்தால் தகர்த்தெறிந்து வெற்றியான, மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிப்போம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

## கடவுளுக்கும் மனிதருக்கும்

"இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தார்" (லூக் 2:52)


இயேசுவின் குழந்தை மற்றும் இளமைப் பருவத்தை நற்செய்தியாளர் லூக்கா மேலே உள்ள ஒரு வாக்கியத்தில் விவரிக்கிறார். தந்தையின் ஒரே பேரான மகனும் (யோவா 17:3) அவரால் உலகத்திற்கு அனுப்பப்பட்டவருமான (யோவா 17 : 18) இயேசு கிறிஸ்து கடவுளோடு ஒன்றாய் இருந்தார் (யோவா 17:21). அதனால் அவர் கடவுளுக்கு உகந்தவராக வாழ்ந்தார் என்று முழுமையாக அறிந்து கொள்ளலாம். ஆனால் புனித பவுல் "நான் இன்னும் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கப் பார்த்தால் கிறிஸ்துவுக்குப் (கடவுளுக்கு) பணியாளனாய் இருக்க முடியாது" (கலா 1:10) என்று தெளிவுபடக்ககூறுகிறார். அப்படியெனில் கிறிஸ்து எப்படி கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராக வாழ்ந்திருக்க முடியும்? என்ற கேள்வி எழுகிறது. கடவுளுக்கு முழுமையாக உகந்தவராக வாழும் ஒருவர் அவரால் உண்டாக்கப்பட்ட மனிதருக்கும் உகந்தவராக வாழ முடியும். இயேசுவைப் போல் வாழும்போது இது யாவருக்கும் சாத்தியமே. இயேசு மனிதர்களைச் சார்ந்து வாழ்கிறார். ஆனால் உலகைச் சார்ந்து வாழவில்லை. அதனால் நான் உலகைச் சார்ந்தவன் அல்ல. (யோவா 17:14) என்று தெளிவுபட மொழிந்தார்.

மனிதர்கள் கடவுளுக்குரியவர்கள். ஆனால் உலகம் தீயோனக்குரியது. எனவேதான் அலகை இயேசுவை சோதிக்கும்போது உலகத்தைச் சுட்டிக்காட்டி இவையாவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன; நான் விரும்பியவருக்கு இவற்றைக் கொடுப்பேன் (லூக் 4:6) என்றான். ஆனால் இயேசு அலகையின் ஆசை வார்த்தைகளுக்கு இணங்கவில்லை. எனவே அலகை கொடுக்கும் எதையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் கடவுளுக்கும், மனிதர்களுக்கும் உகந்தவர்களாக வாழ இயலும் என்று இயேசு கற்றுக்கொடுக்கிறார். தீய நாட்டங்கள் நிறைந்த உலகம் தரும் ஆசீர்வாதங்களிலிருந்து விலகி நிற்போம்; கடவுக்கும் மனிதருக்கும் உகந்த வாழ்க்கை வாழ்வோம்.

நற்பணி M.**லூயிஸ் ஜான் போஸ்கோ**

# பணியாளர் குறுக்கெழுத்துப் போட்டி (04)

ஜீலை மாத நற்செய்திப் பணியாளர் செய்தி மடலில் (இழத்தலே சீடத்துவம் )
இருந்து மட்டுமே கேள்வி கேட்கப்பட்டுள்ளது



**இடமிருந்து வலம்**

2 இறைச்செய்திகளைக் கேட்டும் என்ன வாழ்வு வாழ்கிறோம்

4 அர்ப்பணிப்பின் உயர் வடிவம் யார்?

5 பிறர் உயர்வில் உண்மையான அர்ப்பணிப்பு

6 தீமையால் நமது எது கடினப்பட்டுவிடாமல் காத்துக் கொள்ள வேண்டும்

8 நீரின்றி வறண்ட தரிசு நிலம் போல் என் உமக்காக ஏங்குகின்றது

9 எதன் வழியாக நீங்கள் அமைதியை கண்டடைவீர்கள்

11 சரியான இடத்தில் எதை செலுத்துவதன் மூலம் வளர்ச்சிக்கும் பிரச்சனை தீர்வுக்கும் வழிகாட்டப்படுகிறது

13 கடவுளின் என்பது அவரது பெயர்

**மேலிருந்து கீழ்**

1 பெற்றுக்கொள்வதை விட கொடுத்தலே

3 நம் விண்ணகத் தந்தை கொடுப்பதில் எப்படிப்பட்டவர்?

7 எடுத்து வாசி என்ற அவருக்கு கடவுள் பயத்தை கொடுத்தது

10 நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி மற்றும் நலமளிக்கும் மருந்து எது?

12 நாம் உண்மையை அறிந்தவர்களாய் இருந்தால் உண்மை என்ன அளிக்கும்?

14 எகிப்து நாட்டின் ஆளுநர் யார்?

15 நம் வழிகளை என்ன செய்ய வேண்டும் ?

**போட்டி விதிமுறைகள்**

1. ஒவ்வொரு மாதமும் 15 ம் தேதிக்குள் விடைகள் வந்து சேர வேண்டும்
2. குறுக்கெழுத்து கட்டங்கள் நிரப்பப்படுவதோடு போன மாத பணியாளர் இதழில் நீங்கள் கண்டுபிடிக்கும் வார்த்தை இருக்கும் சரியான பக்க எண் குறிப்பிடப்படவேண்டும்

3. விடை குறித்து சகோதரரின் முடிவே இறுதியானது
4. பரிசுத்தொகை ரூ 500/-. நிறைய பேர் சரியான எழுதியிருந்தால், குலுக்கலின் மூலம் ஒரு நபருக்கு பரிசுத்தொகை வழங்கப்படும்.

சென்ற மாத போட்டியில் கலந்து கொண்டவர்கள் 15 பேர். சரியான விடை எழுதியோர்: நற்பணி லில்லி கிளாரா மேரி, **இடைக்காட்டூர்**, நற்பணி ஆரோக்கியரோசன், லூனா செபஸ்தியான், ரோஸ்மேரி, **தங்கச்சிமடம்**, நற்பணி தைனஸ்மேரி, **ஆர்.எஸ் மங்கலம்**. நற்பணி ஏஞ்சல் நிர்மலா, அலங்கார மேரி, **இராம்நகர்**. நற்பணி கரோலின் மேரி, **பரமக்குடி**.

**குலுக்கல் மூலம் பரிசு பெறுபவர்:** நற்பணி **லில்லி கிளாரா,** இடைக்காட்டூர்

*அனைவருக்கும் வாழ்த்துகள்.*

## திருவிவிலியமும் திருக்குறளும்

திருத்தொண்டர்களில் நற்சான்றும், தூய ஆவி அருளும், வல்லமையும், ஞானமும் நிறைந்து, இறைவார்த்தைப் பணியில் உறுதியாய் நிற்பவர் ஸ்தேவான். இவருடைய நற்செய்திப்பணியால் கடவுள் மீது நம்பிக்கை கொண்டு எருசலேமில் சீடர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே சென்றது. இவருடைய கருத்துக்கு உடன்படாத மறைநூல் அறிஞர்கள், மூப்பர்கள் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராக பழிச்சொற்களை பேசுகிறான் என்று குற்றம் சுமத்தி ஸ்தேவானைக்கைது செய்கிறார்கள் (திப 6:1-15).

கொதித்தெழுந்த ஸ்தேவான், 'திமிர்பிடித்தவர்களே! இறைவார்த்தையைக் கேட்க மறுக்கும் செவியும், ஏற்க மறுக்கும் உள்ளமும் கொண்டவர்களே! தூய ஆவியை எப்போதும் எதிர்க்கின்றவர்களே! இயேசுவைக் காட்டிக் கொடுத்துக் கொன்றவர்களே!' என சிங்கம் போல முழங்குகிறார். மேலும், வானத்தை அண்ணாந்து பார்த்து கடவுளின் மாட்சியையும் அவர் வலப்பக்கத்தில் இயேசு நிற்பதையும் காண்கிறார். அவர்கள் ஸ்தேவானை நகருக்கு வெளியே இழுத்துச்சென்று கல்லெறிகிறார்கள்.

'ஆண்டவராகிய இயேசுவே எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்' என்று கூறி முழங்கால் படியிட்டு உரத்த குரலில் 'ஆண்டவரே இந்தப்பாவத்தை இவர்கள் மீது சுமத்தாதேயும்' என்று கூறி உயிர்விட்டார் (திப 7:54-60).

மேற்காணும் விவிலிய கருத்திற்கு அணி செய்யும் வகையில் வினைத்திட்பம் என்ற அதிகாரத்தில் 666 வது குறட்பாவில்

எண்ணிய எண்ணியாங்கு எய்துபவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

என்ற குறள் அழுத்தம் கொடுக்கிறது. எண்ணியதைச்செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

ஸ்தேவான் சீடத்துவ வாழ்வில் தாம் எண்ணியபடியே இயேசுவோடு நின்று தூய ஆவியாரின் துணையோடு தான் இறக்கும் வரை அனைத்து துன்பங்களையும் எதிர்கொண்டு மரணத்தில் இயேசுவின் மன்னிப்பைப் பிரதிபலித்து இறையாட்சி என்ற புதிய சமுதாயத்தைக்கட்டி எழுப்பினார். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த வளர்ச்சியை அளிக்கும் (யோ12:24) என்ற இறை வார்த்தை கூறும் மறைபொருளை உணர்ந்து நாம் மற்றவர் வாழ்விற்கு விதையாக, விழுதாக இருந்து பயனளிப்போமாக.

- நற்பணி **முத்து ஜூலியானா**, இராம் நகர்.

# காலம்

ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு. உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு (சஉ 3:1).

உலகத்தில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் கடவுள் கட்டுப் படுத்துவதில்லை. மனிதனின் சுய தேர்வுக்கு விட்டுள்ளார், எதையும் தடுப்பதில்லை. காயின் ஆபேலை கொலை செய்த போதும் அவர் தடுக்கவில்லை, ஆனால் அனைத்துக்கும் சாட்சியாக உள்ளார். வாழ்வின் அடுத்தகட்டம் என்னவாக இருக்கும் என் அறிய இயற்கையாகவே மனிதனுக்கு ஆர்வம் உண்டு. அதுவே அவனுக்கு கன்னியாகவும் அமைந்துவிடுகிறது. ஆதி பெற்றோரின் ஆர்வமே பாவத்தில் விழக் காரணமானது. தற்காலத்தில் வாழ்வின் அடுத்த கட்டத்தை அறிய வான்வெளியை கணிப்போரை நாடி செல்பவர் உண்டு. இயேசு பிறப்பை ஞானிகள் கணித்ததும் வான்வெளியை வைத்துதான். ஏன் கடவுள் தன்னுடன் இல்லை என்று தெரிந்ததும் சவுல் அரசர் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் அடுத்த நிகழ்வை அறியவும் அவர் நாடியது சூனியக்காரர்களையே. இத்தகையோரை பார்த்தே கடவுள் இளமை முதல் நீ முயன்று பயின்ற உன் மந்திரங்களோடும் பில்லி சூனியங்களோடும் வந்து நில்; ஒருவேளை உன்னால் சிறிது வெற்றி பெற முடியும்; ஒருவேளை உன் எதிரியை அச்சுறுத்த முடியும். திட்டங்கள் தீட்டியே நீ சோர்வுற்றாய்; வான்வெளியைக் கணிப்போரும், விண்மீன்களை ஆய்வோரும் நிகழவிருப்பதை அமாவாசைகளில் உனக்கு முன்னுரைப் போரும், வந்து உன்னை விடுவிக்கட்டும். (எசா 47 :12-13) என்றுகூறி அவர்கள் விருப்பத்துக்கு விட்டுவிடுகிறார். ஆனால் "என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது (திபா 31:15) என முழுமையாக அவரிடம் ஒப்படைத்துவிட்டவர்களின் வாழ்வில் அவர்களின் ஒவ்வொரு கட்டமும் அவரது கையிலிருந்து பெறப்படுகிறது. ' முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு; உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே. நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனத்தில் வைத்துச் செய்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செம்மையாக்குவார் (நீமொ 3:5,6) என்பதை மறப்பவர்களுக்கு நல்ல நேரத்தில் அரங்கேறும் நிகழ்வுகள் உளவியல் அடிப்படையில் நன்னம்பிக்கையைக் கொடுக்கின்றன. ஆனால் 'யாக்கோபுக்கு எதிரான மந்திர மாயம் ஏதுமில்லை. இஸ்ரயேலுக்கு எதிரான குறி கூறல் யாதுமில்லை; (எண் 23:23) என்பதை விடவா உளவியல் அடிப்படையில் நம்பிக்கையை கொடுத்துவிடப்போகிறது.

கடவுள் மனிதனுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார் அம்மக்கள் தூய்மையாக வாழ பத்துகட்டளைகளைக் கொடுத்தார். அது சட்டமாகவும் விளங்கியது. அதை மீறுவதே பாவம் எனக்கருதப்பட்டது. 'தன் புதல்வனை அல்லது புதல்வியைத் தீ மிதிக்கச் செய்கிறவனும், குறி சொல்கிறவனும், நாள் பார்க்கிறவனும், சகுனங்களை நம்புகிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், ஏவிவிடுகிறவனும், இறந்தவர்களிடம் குறிகேட்கிறவனும், மாயவித்தைக்காரனும், உங்களிடையே இருத்தலாகாது. கடவுளாகிய உன் ஆண்டவருக்கு நீ முற்றிலும் உண்மையாய் இரு' (இச 18:10,11,13), அவருக்கு உண்மையாயிருக்கும் போது. அவர் கூறுகிறபடி உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு; அவரையே நம்பியிரு; அவரே உன் சார்பில் செயலாற்றுவார். (திபா39:5) என்பது உண்மையே. 'அவர் செயல்பட வேண்டுமென்றால் ஆண்டவர் கூறுவது: 'வேற்றினங்களின் வழியைக் கற்றுக் கொள்ளாதீர்; வானத்தில் தோன்றும் அடையாளங்களைக் கண்டு கலங்காதீர்; வேற்றினத்தாரே அவற்றால் கலக்கமுறுவர். (எரே 10:2)', கிறிஸ்தவர்கள் இதைப்பார்த்து கலக்கமுறுவதில்லை ஏனென்றால் இவர்கள் கிறிஸ்துவோடு அவரின் இரத்தத்தால் புதிய உடன்படிக்கையின் மக்களாவர் (லூக் 22:20). அதனால்

அவர்களுக்குத் தகுந்த வேளையில் பதிலளித்து கடவுள் துணையாய் இருக்கிறார். எனவே எல்லா காலமும் தகுந்த காலம்! எல்லா நாளும் மீட்பு நாள்! (2 கொரி 6 :2) ஒரு பாவி எந்த காலத்திலும் மனம் மாறலாம். நீங்கள் அந்த அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல; மாறாக இது கடவுளின் கொடை' (எபே 2:8). கடவுளின் கொடையை பெறுவதால் எந்த பாதிப்பும் அவர்களைத் தீண்டுவதில்லை. ஏனென்றால் அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார்'. (யோவா 1:12) கடவுளின் பிள்ளைகளுக்கு இயேசுவைப்போல் சோதனைகள் வரலாம். ஆனால் தோல்வி என்பது இல்லை. கடவுள் நம்மோடு இருக்க நம்மை பாதிப்பவர் எவர்? அவரை எந்த புரட்டாசியும் புரட்டிபோட முடியாது.

மதுரையில் சமணர்களின் செல்வாக்கை முறியடிக்கத் திருஞானசம்பந்தர் செல்லவிருந்தபோது, கோள்களின் நிலை சரியில்லை எனத் திருநாவுக்கரசர் தடுத்தார். அப்போது, 'கடவுளின் அடியவர்களுக்கு எந்த நாளும் கோளும் தீமை செய்யாது' என்று கூறி, சம்பந்தர் அருளியதே கோளறு பதிகம் ஆகும். இது தேவாரம் இரண்டாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது, அதற்கு திருஞானசம்பந்தர், கடவுளின் திருவடிகளைச் சரணடைந்தவர்களுக்கு ஒன்பது கோள்களும், பிற துன்பங்களும் நன்மையே செய்யும் என்பதை உணர்த்தும் வகையில் 'வேயுறு தோளிபங்கன்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார், மதுரை சென்று சமணர்களை வென்றார். எந்த கோள்களும் அவரைப் பாதிக்கவில்லை கடவுளின் அடியார்களை எந்தத் தீய சக்தியும், நோயும், கிரக நிலைகளும் அணுகாது என்பது இப்பதிகத்தின் மூலக் கருத்து

கடவுளை நம்பி, அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறவர்களுக்கு கடவுள் தமது பாதுகாப்பையும் இரக்கத்தையும் அளிக்கிறார் என்பது உண்மை.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்.

## உடனிருக்கும் நிழல் + தூய ஆவி

என் அன்பு சமூகமே! உடனிருக்கும் நிழலை நாம் என்றாவது உணர்ந்து இருக்கிறோமா? நான் என் தோழிகளுடன் நடை பயிற்சி மேற்கொண்ட போது பலவிதமான இனிமையான குரல்களைக் கேட்டு ரசித்தேன். எங்கோயிருந்து வந்த குயிலின் குரல் என் காதுகளில் ரீங்காரமிட்டது. அதனுடைய மெல்லிய குரல் என்னை குதுகலம் அடையச் செய்தது. மெய் சிலிர்த்துப் போனேன். அப்போதுதான் புரிந்தது குயிலின் குரலே என் மனதை மென்மையாக மாற்றும் போது என் ஆவியானவரின் நிழல் என் கூடவே இருந்ததை நான் ஏன் கண்டு கொள்ளாமல் உணராமல் வாழ்கிறேன்? என்ற கேள்வி எழும்பியது. கேள்விக்கான பதிலைத் தேட ஆரம்பித்தேன் (எரோ 31:3).

மனிதனுக்குள் பலவிதமான போராட்டங்கள். யார் என்னைத் தேற்றுவார்? யார் எனக்கு ஆறுதலாய் இருப்பார்? யார் அன்பு செய்வார்கள்? யார் நோயில் உதவி செய்ய உடனிருப்பார்கள்? என்று நம்மைச் சுற்றியுள்ள உறவுகளை மட்டுமே நிழலாக நினைக்கிறோம். ஆனால் எந்த உறவும் நிழலாக நமக்கு வருவதில்லை. ஆனால் நமக்கு நிழலாகத் துணையாக, சுமையைத் தாங்குபவராக, வலியை மாற்றுபவராக, தோளுக்கு தோளாக, நோய்க்கு மருந்தாக ஆவியானவர் பயணித்து உடன் வருவதை மறந்து விடுகிறோம்.

ஆவியானவர் நம்மோடு ஒவ்வொரு நாளும் பேசுகிறார். என் மகனே! என் மகளே!

உனது நிழலாய் நிற்கும் என்னைச் சற்று உற்றுப் பார்! உன் சுமையையும், வலியையும் இறக்கி என்னிடம் தந்துவிடு. ஆனால் நாம் செவி கொடுத்து கேட்பதில்லை. அவர் குரலை கேட்க என்ன செய்ய வேண்டும்? மீட்பை தலைசீராகவும் கடவுளின் வார்த்தையை தூய ஆவி அருளும் போர் வாளாகவும் எடுத்துக் கொள்வோம். எல்லா வேண்டல்களையும் மன்றாட்டுகளையும் இறைவனிடம் எழுப்புங்கள்.எப்போதும் தூய ஆவியின் துணைகொண்டு வேண்டுதல் செய்யுங்கள் (எபே 6:14-18). இவ்வாறு வாழும்போது தூய ஆவியானவரின் நிழல் நம்மோடு இருந்து நம்மை தேற்றும். திடன் அளிக்கும் வாழ்வில் வெற்றி பெற உறுதுணையாய் இருக்கும் இந்த நம்பிக்கையில் நாளும் பயணிப்போம்.

நற்பணி **வி.லுவானா செபஸ்டியான்**

## இது சாத்தியமா?

இயேசு செய்த எல்லா அற்புதங்களையும், அதிசயங்களையும் ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் நூல்களை உலகமே கொள்ளாது என கருதுகிறார் நற்செய்தியாளர் யோவான் (யோ. 21: 25).

பல மூத்த பணியாளர்கள் 'காற்றையோ மழையையோ காணப்போவதில்லை. ஆயினும் இந்த பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும்' (2 அர.3:17) என்ற இறை வார்த்தையை அறிக்கை விட்டு ஏராளமான நன்மைத்தனங்களைப் பெற்றுக் கொண்டதாக பகிர்ந்திருக்கிறார்கள். இத்தனை மூத்த பணியாளர்களுக்கு செய்த கடவுள் எனக்கும் செய்ய மாட்டாரா? நானும் அவர் பாதத்தில் அமர்ந்து இறை வார்த்தை அறிக்கை விட்டு செபித்தபோது 'இப்படி நடந்தால் இது நன்றாக இருக்குமே' என்று எண்ணியபோதுகூட அந்த காரியங்கள் நடந்திருக்கின்றன.

என்னே இறைவார்த்தைக்குரிய ஆற்றல்! (எபி4:12). இறை வார்த்தையை அறிக்கையிட்டு இறைத்திருவுளமானால் நமது பள்ளத்தாக்குகள் நீரால் நிரப்பப்படுவது சாத்தியம் தானே!

நற்பணி **J. அருள் இளங்கோ**, இராம்நகர்

## ஆண்டுத் தியானம் — 2026

| நாள் | | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | ஆகஸ்டு 26<br>**21/22&23** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி G.பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி S.ஆரோக்கியசாமி |
| 2. | அக்டோபர் 26<br>**09/10&11** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி M.சேவியர்<br>நற்பணி K.ஜஸ்டின் கபிரியேல் |
| 3. | அக்டோபர் 26<br>**23/24&25** | அமல அன்னை<br>அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி I.செபஸ்தியான்<br>நற்பணி A.சகாயலூயி |
| 4. | நவம்பர் 26<br>**20/21&22** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி GMS.ராணி<br>நற்பணி S.ஸ்தனிஸ்லாஸ் |
| 5. | நவம்பர் 26<br>**27/28&29** | அமல அன்னை<br>அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி J.அருள் இளங்கோ<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ் |
| 6. | டிசம்பர் 26<br>**04/05&06** | அமல அன்னை<br>அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி L.ஆரோக்கியசாமி<br>நற்பணி A.R.ஆசைராஜ் |

## ஆகஸ்ட 2026 நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01.8.26 | சீராய்வு வட்டாரக் கூட்டம் | சாயல்குடி வட்டாரம் |
| 02.8.26 | சீராய்வு வட்டாரக் கூட்டம் | கமுதி வட்டாரம் |
| 02.8.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், காளையார்கோவில், கோட்டைக்காடு. |
| 05.8.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலன்னை அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 08.8.26 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம், இடைக்காட்டூர் |
| 08.8.26 | சீராய்வு வட்டாரக் கூட்டம் | மகிண்டி மிக்கேல்பட்டணம் வட்டாரம் |
| 08.8.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம், மாந்தை |
| 09.8.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | இராமநாதபுரம், சிவகங்கை, ஓரியூர், காயாவயல், மணல்மேல்குடி. |
| 09.8.26 | சீராய்வு | சருகணி வட்டாரம் |
| 09.8.26 | தொடர் களப்பணி | இராம்நகர், நானாக்குடி, காரங்காடு கமுதி, கீழ உச்சாணி, செங்குடி, சாயல்குடி பங்குகள். |
| 15&16.8.26 | தெளிந்து தேர்தல் தியானம் | தஞ்சாவூர் |
| 16.8.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | சி.கே. மங்கலம், மன்னார்குடி, |
| | | அறந்தாங்கி |
| 16.8.26 | சீராய்வு வட்டாரக் கூட்டம் | சி.கே. மங்கலம் வட்டாரம் |
| 21-23. | ஆண்டுத் தியானம்-III | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 08.26 | | |
| 22.8.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | மங்களபுரம், நாகப்பட்டிணம் |
| 22.8.26 | சீராய்வு வட்டாரக் கூட்டம் | தேவகோட்டை வட்டாரம் |
| 23.8.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | சாயல்குடி, ஆர்.எஸ்.மங்கலம், |
| | | சீர்காழி, மயிலாடுதுறை |
| 29.8.26 | சீராய்வு வட்டாரக் கூட்டம் | செக்காலை வட்டாரம் |

## ஆகஸ்ட் 2026 சீராய்வு வட்டாரத் தியானக் கூட்டம்

| நாள் | வட்டாரம் |
|---|---|
| 01.08.2026 | சாயல்குடி |
| 02.08.2026 | கமுதி |
| 08.08.2026 | மகிண்டி மிக்கேல் பட்டணம் |
| 09.08.2026 | சருகணி |
| 16.08.2026 | சி.கே. மங்கலம் |
| 22.08.2026 | தேவகோட்டை |
| 29.08.2026 | செக்காலை |
| 30.08.2026 | சிவகங்கை |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 02.08.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி M. லூயிஜான்போஸ்கோ<br>நற்பணி A. அடைக்கலம் |
| 02.08.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி C. பிரான்சிஸ் சேவியர் |
| 08.08.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி P. சகாயராணி<br>நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி X. லூர்துமேரி |
| 09.08.26 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி பெ. தெரசா மிரண்டா |
| 09.08.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி L. ஜோசப் இருதயம்<br>நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி A. யூஜின் அமலராஜ் |
| 09.08.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி தை. அமல்ராஜ்<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 09.08.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி P.அமலோற்பவ ஆரோக்கியராணி<br>நற்பணி A. ஆரோக்கியசாமி (போ.மையம்)<br>நற்பணி L. ஆரோக்கியசாமி<br>நற்பணி M. ரேஸ்லின் ரீட்டா |
| 16.08.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி A. சகாய தமிழ்செல்வி<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி S. ஆரோக்கியமேரி |
| 23.08.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி A. யூஜின் அமலராஜ்<br>நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி J. சார்லஸ்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 23.08.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி கோ.அம்பிகா எலியாஸ்<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி S. தைனஸ்மேரி |

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 02.08.26 I | புனித சூசையப்பர் கோவில், கோட்டைக்காடு | நற்பணி L. ஆரோக்கியசாமி 9150579311 நற்பணி A. ஆரோக்கியசாமி 9843323429 |
| 08.08.26 | திரு இருதய ஆண்டவர் கோவில், மாந்தை | நற்பணி தை. அமல்ராஜ் 9443983519 நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ 9443503618 |
| 09.08.26 II | புனித ஆரோக்கியமாதா கோவில், மணல்மேல்குடி | நற்பணி M. விசுவாசம் 9442758641 நற்பணி S. பால்ராஜ் 9789077287 |
| 16.08.26 III | புனித சூசையப்பர் கோவில், மன்னார்குடி | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206 நற்பணி S. அந்தோணி பிரகாஷ் 9787791869 |
| 16.08.26 III | திரு இருதய ஆண்டவர் கோவில், தஞ்சாவூர் | நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 நற்பணி S. பால்ராஜ் 9789077287 |
| 16.08.26 III | கிறிஸ்து அரசர் கோவில் அறந்தாங்கி | நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762 நற்பணி தை.அமல்ராஜ் 9443983519 |
| 22.08.26 | புனித லூர்து அன்னை கோவில், மங்களபுரம் | நற்பணி S. அந்தோணிபிரகாஷ் 9787791869 நற்பணி A. ஆரோக்கியசாமி(போ.மையம்) 9787037717 |
| 22.08.26 | புனித மாதரசி மாதா கோவில் நாகப்பட்டிணம் | நற்பணி S. மோட்சஅலங்காரம் 9843490206 நற்பணி M. விசுவாசம் 9442758641 |
| 23.08.26 IV | புனித சிந்தாத்திரி மாதா கோவில், எருக்கூர் | நற்பணி M. விசுவாசம் 9442757641 நற்பணி S. மோட்சஅலங்காரம் 9843490206 |
| 23.08.26 | புனித லூர்துமாதா கோவில் சீர்காழி | நற்பணி S. அந்தோணிபிரகாஷ் 9787791869 நற்பணி A. ஆரோக்கியசாமி(போ.மையம்) 9787037717 |
| 23.08.26 IV | புனித சவேரியார் கோவில் மயிலாடுதுறை | நற்பணி J. அருள் இளங்கோ 9942434307 நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 |

# புனித மோனிக்கா (ஆகஸ்ட் 27)



புனித மோனிக்கா, 'ஹிப்போவின் மோனிக்கா என்று தொடக்க கால கிறிஸ்தவ புனிதையும் புனித அகுஸ்தினாரின் தாயுமாவார்.

இவர் இளவயதிலேயே 'பேட்ரீசியஸ் என்வருக்கு திருமணம் செய்துவைக்கப்பட்டார். 'பேட்ரீசியஸ்', அல்ஜீரியாவில் அரசு சார்ந்த பதவி வகித்து வந்தார். அவர் வன்முறை, கோபம் போன்ற குணங்களைக் கொண்டிருந்ததோடு. ஒழுக்கமற்று வாழ்வு வாழ்ந்தார். இதனால் கிறிஸ்தவரான மோனிக்காவின் மணவாழ்வு அமைதியின்றி இருந்தது. மோனிகாவின் உதாரண குணம், செயல்பாடுகள் மற்றும் செப வாழ்வு பேட்ரிசியஸைக் கோபமூட்டின.

இவர்களுக்கு, மூன்று குழந்தைகள். மூத்தவர் அகுஸ்தீன்' இரண்டாமவர் 'நவீஜியஸ்' மூன்றாவது பெண்குழந்தை 'பெர்பெச்சுவா. தன் கணவரின் அனுமதி கிடைக்காததால் இவர்களுக்கு மோனிக்காவால் திருமுழுக்கு கொடுக்க இயலவில்லை. இளவயதினில் அகுஸ்தீன் நோய்வாய்ப்பட்டபோது, திருமுழுக்கு கொடுக்க இணங்கினாலும், உடல் நலம் தேறியதும், பேட்ரிசியஸ் தன் மனதை மாற்றிக் கொண்டார்.

அகுஸ்தீன் மடௌரஸ்' நகருக்குக் கல்வி கற்க அனுப்பப்பட்டார். இவ்வேளையில் பேட்ரீசியஸ் மனமாறி கிறிஸ்தவரானார். பேட்ரீசியஸ் மனமாறிய சில நாட்களிலேயே இறந்தார். தமது பதினேழு வயதில், 'கார்தேஜ் நகருக்கு அணியிலக்கணம் கற்கச் சென்ற அகுஸ்தீன், அங்கே ஒழுக்கமற்ற தாறுமாறான வாழ்வை வாழத் தொடங்கினார். அகுஸ்தீன் மனிச்செஸம்' எனும் புதிய மதத்தைத் தழுவி தம் தாயாரை மனம் நோகச் செய்தார்.

அகுஸ்தீன் அன்றைய உலகின் கலாச்சார மையமாக இருந்த ரோம் நகருக்கு யாரிடமும் சொல்லாமல் பயணமாகிச் சென்றார். இதை அறிந்த மோனிக்கா மகனைத் தேடி உரோமுக்குச் சென்றார். அதற்குள் அகுஸ்தீன் மிலான் சென்றுவிட்டார். அங்கேயும் மோனிக்கா மகனைப் பின்தொடர்ந்தார். மிலான் நகர பேராயரான அம்புரோசால் மனமாற்றம் அடைந்த அகுஸ்தீன், 17 வருட எதிர்ப்புக்குப் பின் திருமுழுக்கு பெற்றார். அகுஸ்தீன் எழுதிய சுயசரித நூலாகிய ஒப்புதல்கள்' என்னும் புத்தகத்தில் தம் இளமைக்கால அனுபவங்களையும் தாம் தவறான வழியில் சென்றதையும், பின் தன் தாயின் இறை வேண்டுதலால் மனம் மாறியதையும் விரிவாக விளக்கியுள்ளார்.

இத்தாலி நாட்டை விட்டு ஆப்பிரிக்காவுக்குப் பயணமாகச் செல்லுவதற்கு அகுஸ்தீனும் மோனிக்காவும் உரோம் நகரின் துறைமுகமாகிய 'ஒஸ்டியா' நகரில் காத்திருந்தபோது மோனிக்கா நோய்வாய்ப்பட்டு மரித்தார். புனித மோனிக்கா தன் மகன் மனமாற்றத்திற்காக கண்ணீரோடு செபித்ததுபோன்று நாமும் நம் பிள்ளைகள் கடவுள் பயத்தோடு வளர செபிப்போம், இறைநம்பிக்கையில் நிலைத்துநிற்போம்.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.

**இப்ப இல்லாட்டி எப்ப ?**

-எல்லாரோ

பிறர் குறை காணும் கண்கள் நிறைவைக் காண முடியாது.

தன் குறை காண்போம். **நிறை குடமாவோம்.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையாலே உங்களுக்கும் அளக்கப்படும். (மத் 7:2).

# ஆலோசனையின் ஏழு நுண்திறன்கள்
## (Microskills of Counselling)

**கேட்பதில் தொடங்கி – மாற்றத்தில் முடியும் ஆலோசனையின் ஏழு படிகள்**

> "ஒரு நல்ல ஆலோசகர் பிரச்சினையை மட்டும் கேட்பதில்லை; மனிதரையும், அவரது உணர்வுகளையும், எதிர்கால நம்பிக்கையையும் கவனிக்கிறார்."

**ஆலோசனையின் ஏழு நுண்திறன்கள்**
மனதை தொடும் பயணம்
மாற்றத்தில் முடியும்



### 1 கவனம் செலுத்தும் நடத்தை (Attending Behaviour)

எவ்வாறு?
- இயல்பான கண் தொடர்பு
- அமைதியான முகபாவனை
- திறந்த உடல் மொழி
- முழு கவனத்துடன் கேட்பது
- இடையூறு இல்லாத சூழல்

**விளைவு:** "நான் மதிக்கப்படுகிறேன்; என்னைக் கவனமாகக் கேட்கிறார்கள்" என்ற நம்பிக்கை உருவாக்குகிறது.

**நோக்கம்:** பாதுகாப்பு, மதிப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உணர்வை உருவாக்குதல்.

**முக்கிய கருத்து:** "மனதைத் தொடும் முதல் மொழி – கவனமாகக் கேட்பதே."

### 2 கேள்வி கேட்டல் (Questioning)

எவ்வாறு?
- திறந்த கேள்விகள் (Open-ended Questions)
- மூடிய கேள்விகள் (Closed Questions)
- தெளிவுபடுத்தும் கேள்விகள்
- ஆராயும் கேள்விகள்

**நோக்கம்:** பிரச்சினையை தெளிவாக புரிந்துகொண்டு, எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்த உதவுதல்.

**விளைவு:** உண்மையான பிரச்சினை வெளிப்பட்டு, உரையாடல் ஆழமடைகிறது.

**முக்கிய கருத்து:** "சரியான கேள்வி, சரியான பதிலுக்கான கதவைத் திறக்கிறது."

### 3 பிரதிபலித்தல் (Reflecting)

எவ்வாறு?
- உணர்வுகளை பிரதிபலித்தல்
- கருத்துகளை மீண்டும் கூறுதல்
- அனுபவத்தை அங்கீகரித்தல்

**நோக்கம்:** ஆலோசனை பெறுபவரின் உணர்வுகளையும் கருத்துகளையும் அவருக்கே தெளிவுபடுத்துதல்.

**விளைவு:** தன்னைப் பற்றிய புரிதல் (Self-awareness) அதிகரிக்கிறது.

### 4 சுருக்கமாகக் கூறுதல் (Summarizing)

எவ்வாறு?
- முக்கிய கருத்துகளை தொகுத்தல்
- உணர்வுகளை இணைத்தல்
- அடுத்த கட்ட உரையாடலுக்குத் தயார்படுத்தல்

**விளக்கம்:** உரையாடலின் முக்கிய அம்சங்களை ஒழுங்குபடுத்தி தெளிவுபடுத்துதல்.

**முக்கிய கருத்து:** "சிதறிய எண்ணங்களை ஒரே பாதையில் நடத்துவது சுருக்கமாகக் கூறுதலின் நோக்கம்."

### 5 ஊக்குவித்தல் (Encouraging)

எவ்வாறு?
- தலை அசைத்தல்
- "ஆம்", "சரி", "தொடருங்கள்" போன்ற வார்த்தைகள்
- நேர்மறையான உறுதிப்படுத்தல்
- பாராட்டுதல்

**நோக்கம்:** தொடர்ந்து பேசவும், தன்னம்பிக்கையுடன் முன்னேறவும் ஊக்கமளித்தல்.

**விளைவு:** பயமின்றி மனம் திறந்து பேசும் சூழல் உருவாகிறது.

**முக்கிய கருத்து:** "ஒரு சிறிய ஊக்கம், ஒரு பெரிய மாற்றத்தின் தொடக்கமாக அமையும்."

### 6 எதிர்கொள்ளுதல் (Confrontation)

எவ்வாறு?
- குற்றம் சாட்டாமல் பேசுதல்
- முரண்பாடுகளை எடுத்துக்காட்டுதல்
- சுயபரிசோதனைக்கு வழிநடத்துதல்

**நோக்கம்:** முரண்பாடுகள், தவறான எண்ணங்கள் அல்லது நடத்தைகளை மரியாதையுடன் உணர்த்துதல்.

**விளைவு:** உண்மையை ஏற்றுக்கொண்டு, மாற்றத்திற்கான மனப்பக்குவம் உருவாகிறது.

**முக்கிய கருத்து:** "எதிர்கொள்ளுதல் என்பது விமர்சனம் அல்ல; விழிப்புணர்வை உருவாக்கும் அன்பான வழிகாட்டல்."

### 7 கவனம் செலுத்துதல் (Focusing)

எவ்வாறு?
- முக்கிய பிரச்சினையை அடையாளம் காணுதல்
- உரையாடலை இலக்குடன் முன்னெடுத்தல்
- செயல்திட்டத்தை உருவாக்குதல்

**நோக்கம்:** பல பிரச்சினைகளில் இருந்து முக்கியமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து தீர்வை நோக்கி வழிநடத்துதல்.

**விளைவு:** தெளிவான இலக்கு மற்றும் பயனுள்ள தீர்வு உருவாகிறது.

**முக்கிய கருத்து:** "கவனம் தெளிவாக இருந்தால், தீர்வும் தெளிவாக இருக்கும்."

### ஆலோசனையின் ஏழு நுண்திறன்கள் – ஒரு பார்வையில்

| படிநிலை | நுண்திறன் | முக்கிய நோக்கம் |
|---|---|---|
| 1 | கவனம் செலுத்தும் நடத்தை | நம்பிக்கையான உறவை உருவாக்குதல் |
| 2 | கேள்வி கேட்டல் | தகவல்களை அறிதல் |
| 3 | பிரதிபலித்தல் | உணர்வுகளைப் புரியவைத்தல் |
| 4 | சுருக்கமாகக் கூறுதல் | தெளிவுபடுத்துதல் |
| 5 | ஊக்குவித்தல் | தொடர்ந்து பகிர ஊக்கமளித்தல் |
| 6 | எதிர்கொள்ளுதல் | முரண்பாடுகளை உணர்த்துதல் |
| 7 | கவனம் செலுத்துதல் | தீர்வை நோக்கி வழிநடத்துதல் |

### நினைவில் நிற்கும் வரிசை

கவனி
↓
கேள்
↓
பிரதிபலி
↓
சுருக்கு
↓
ஊக்குவி
↓
எதிர்கொள்
↓
இலக்கை நோக்கி வழிநடத்து

**முடிவுரை:**
ஆலோசனை என்பது அறிவுரை வழங்குவது அல்ல; ஒருவரின் வாழ்க்கைப் பயணத்தில் அவருடன் இணைந்து நடந்து, அவரே தனது திறன்களை உணர்ந்து சரியான முடிவை எடுக்க உதவும் கலையும் அறிவியலும் ஆகும். இந்த ஏழு நுண்திறன்களே அந்தப் பயணத்தின் வலிமையான அடித்தளமாக அமைக்கின்றன.

**அசைபோட அரை நிமிடம்:**
"நுண்திறன்கள் ஆற்றுபடுத்துனரை ஆற்றல் படுத்துகிறது."



கடந்த நாட்களில் ஆலோசனையின் ஏழு நுண்திறன்கள் (Microskills of Counselling) பற்றி பார்த்தோம்.

இப்பகுதியில் அவற்றை நினைவு படுத்த சுருக்கமாக பார்ப்போம்.

'கேட்பதில் தொடங்கி — மாற்றத்தில் முடியும் ஆலோசனையின் ஏழு படிகள்'

'ஒரு நல்ல ஆலோசகர் பிரச்சினையை மட்டும் கேட்பதில்லை; மனிதரையும், அவரது உணர்வுகளையும், எதிர்கால நம்பிக்கையையும் கவனிக்கிறார்.'

1. **கவனம் செலுத்தும் நடத்தை** (Attending Behaviour)

**நோக்கம்:** ஆலோசனை பெறுபவருக்கு பாதுகாப்பு, மதிப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உணர்வை உருவாக்குதல். எவ்வாறு?

- இயல்பான கண் தொடர்பு
- அமைதியான முகபாவனை
- திறந்த உடல் மொழி
- முழு கவனத்துடன் கேட்பது
- இடையூறு இல்லாத சூழல்

**விளைவு:** 'நான் மதிக்கப்படுகிறேன்; என்னைக் கவனமாகக் கேட்கிறார்கள்' என்ற நம்பிக்கை உருவாகிறது.

**முக்கிய கருத்து:** 'மனதைத் தொடும் முதல் மொழி - கவனமாகக் கேட்பதே.'

**2. கேள்வி கேட்டல்** (Questioning)

**நோக்கம்:** பிரச்சினையை தெளிவாகப் புரிந்துகொண்டு, ஆலோசனை பெறுபவர் தன் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த உதவுதல். எவ்வாறு?

- திறந்த கேள்விகள் (Open-ended Questions)
- மூடிய கேள்விகள் (Closed Questions)

**தெளிவுபடுத்தும் கேள்விகள்:** ஆராயும் கேள்விகள்

**விளைவு:** உண்மையான பிரச்சினை வெளிப்பட்டு, உரையாடல் ஆழமடைகிறது.

முக்கிய கருத்து: 'சரியான கேள்வி, சரியான பதிலுக்கான கதவைத் திறக்கிறது.'

**3. பிரதிபலித்தல்** (Reflecting)

**நோக்கம்:** ஆலோசனை பெறுபவரின் உணர்வுகளையும் கருத்துகளையும் அவருக்கே தெளிவுபடுத்துதல். எவ்வாறு?

- உணர்வுகளை பிரதிபலித்தல்
- கருத்துகளை மீண்டும் கூறுதல்
- அனுபவத்தை அங்கீகரித்தல்

**விளைவு:** தன்னைப் பற்றிய புரிதல் (Self-awareness) அதிகரிக்கிறது.

**முக்கிய கருத்து:** 'புரிந்துகொள்வது மட்டுமல்ல; புரிந்ததை உணர்த்துவதும் ஆலோசனையே.'

**4. சுருக்கமாகக் கூறுதல்** (Summarizing)

**நோக்கம்:** உரையாடலின் முக்கிய அம்சங்களை ஒழுங்குபடுத்தி தெளிவுபடுத்துதல். எவ்வாறு?

- முக்கிய கருத்துகளை தொகுத்தல்
- உணர்வுகளை இணைத்தல்
- அடுத்த கட்ட உரையாடலுக்குத் தயார்படுத்தல்

**விளைவு:** குழப்பம் குறைந்து தெளிவு உருவாகிறது.

**முக்கிய கருத்து:** 'சிதறிய எண்ணங்களை ஒரே பாதையில் நடத்துவது **சுருக்கமாகக் கூறுதலின் நோக்கம்.'**

**5. ஊக்குவித்தல்** (சிஜஉலிற்ஷெழிஆஷ்ஜஆ)

**நோக்கம்:** தொடர்ந்து பேசவும், தன்னம்பிக்கையுடன் முன்னேறவும் ஊக்கமளித்தல் எவ்வாறு?

- தலை அசைத்தல்
- 'ஆம்', 'சரி', 'தொடருங்கள்' போன்ற வார்த்தைகள்
- நேர்மறையான உறுதிப்படுத்தல்
- பாராட்டுதல்

**விளைவு:** பயமின்றி மனம் திறந்து பேசும் சூழல் உருவாகிறது.

**முக்கிய கருத்து:** 'ஒரு சிறிய ஊக்கம், ஒரு பெரிய மாற்றத்தின் தொடக்கமாக அமையும்.'

### 6. எதிர்கொள்ளுதல் (Confrontation)

**நோக்கம்:** முரண்பாடுகள், தவறான எண்ணங்கள் அல்லது நடத்தைகளை மரியாதையுடன் உணர்த்துதல். எவ்வாறு?

- குற்றம் சாட்டாமல் பேசுதல்
- முரண்பாடுகளை எடுத்துக்காட்டுதல்
- சுயபரிசோதனைக்கு வழிநடத்துதல்

**விளைவு:** உண்மையை ஏற்றுக்கொண்டு, மாற்றத்திற்கான மனப்பக்குவம் உருவாகிறது.

**முக்கிய கருத்து:** 'எதிர்கொள்ளுதல் என்பது விமர்சனம் அல்ல; விழிப்புணர்வை உருவாக்கும் அன்பான வழிகாட்டல்.'

### 7. கவனம் செலுத்துதல் (Focusing)

**நோக்கம்:** பல பிரச்சினைகளில் இருந்து முக்கியமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து தீர்வை நோக்கி வழிநடத்துதல். எவ்வாறு?

- முக்கிய பிரச்சினையை அடையாளம் காணுதல்
- உரையாடலை இலக்குடன் முன்னெடுத்தல்
- செயல்திட்டத்தை உருவாக்குதல்

**விளைவு:** தெளிவான இலக்கு மற்றும் பயனுள்ள தீர்வு உருவாகிறது.

**முக்கிய கருத்து:** 'கவனம் தெளிவாக இருந்தால், தீர்வும் தெளிவாக இருக்கும்.'

### ஆலோசனையின் ஏழு நுண்திறன்கள் – ஒரு பார்வையில்

| படிநிலை | நுண்திறன் | முக்கிய நோக்கம் |
|---|---|---|
| 1 | கவனம் செலுத்தும் நடத்தை | நம்பிக்கையான உறவை உருவாக்குதல் |
| 2 | கேள்வி கேட்டல் | தகவல்களை அறிதல் |
| 3 | பிரதிபலித்தல் | உணர்வுகளைப் புரியவைத்தல் |
| 4 | சுருக்கமாகக் கூறுதல் | தெளிவுபடுத்துதல் |
| 5 | ஊக்குவித்தல் | தொடர்ந்து பகிர ஊக்கமளித்தல் |
| 6 | எதிர்கொள்ளுதல் | முரண்பாடுகளை உணர்த்துதல் |
| 7 | கவனம் செலுத்துதல் | தீர்வை நோக்கி வழிநடத்துதல் |

### நினைவில் நிற்கும் வரிசை

கவனி → கேள் → பிரதிபலி → சுருக்கு → ஊக்குவி → எதிர்கொள் → இலக்கை நோக்கி வழிநடத்து

**முடிவுரை:** 'ஆலோசனை என்பது அறிவுரை வழங்குவது அல்ல; ஒருவரின் வாழ்க்கைப் பயணத்தில் அவருடன் இணைந்து நடந்து, அவரே தனது திறன்களை உணர்ந்து சரியான முடிவை எடுக்க உதவும் கலையும் அறிவியலும் ஆகும். இந்த ஏழு நுண்திறன்களே அந்தப் பயணத்தின் வலிமையான அடித்தளமாக அடைகின்றன.

**அசைபோட அரை நிமிடம்:**

'நுண்திறன்கள் ஆற்றுபடுத்துனரை ஆற்றல் படுத்து கிறது.'

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.

மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம் www.arulchandrunilayam.org

## என்னை மன்னியும்

- “சோதனைகளை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறு பெற்றோர்” என்ற வாக்குறுதியை அறிந்தும் சோதனை, துன்ப வேளையில் மனச்சோர்வுக்கும், ஆன்ம தளர்ச்சிக்கும் இடம் கொடுத்ததற்காக இறைவா! என்னை மன்னியும் (யாக் 1:12)
- நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலை உயிரற்றதாயிருக்கும் என்பதை அறிந்தும், எனது நம்பிக்கையை வழிபாட்டில் வெளிப்படுத்தி விட்டு, வாழ்வின் செயல்பாடுகளில் வெளிப்படுத்தத் தவறியதை எண்ணி வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (யாக் 2:17)
- நாவை அடக்க யாராலும் முடிவதில்லை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது கொடியது; சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது என்ற எச்சரிக்கையை அறிந்தும் நாவால் பிறரைக் காயப்படுத்தம்படி, தவறான இழிவான வார்த்தைகளைப் பேசியதற்காக இறைவா! என்னை மன்னியும் (யாக்3:8)
- பொறாமையும், கட்சி மனப்பான்மையும் உள்ள இடத்தில் குழப்பமும் எல்லாக் கொடுஞ்செயல்களும் நடக்கும் என்ற ஆபத்தை அறிந்தும் பிறரின் நல்வாழ்வில், வளர்ச்சியில் பொறாமை கொண்டு வாழ்ந்ததை எண்ணி வருத்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (யாக் 3:16)

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

- பெரிய நகரங்களில் அடையாளமின்றி வாழும் ஏழை, எளியோர் கண்டு கொள்ளப்பட்டு உரிய அங்கீகாரம் பெற
- நகரங்களில் கடவுளைச் சார்ந்து வாழும் வாழ்க்கையை உருவாக்கும் புதிய நற்செய்தி அறிவிப்பு வழிகளைக் கண்டறிந்து செயல்படுத்த
- அதிக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நல்ல மழைபெய்து வறட்சி நீங்க
- அமெரிக்கா, ஈரான் நாடுகளிடையே நடைபெறும் போர் நிறுத்தப்பட்டு அமைதி உருவாக
- இந்தியாவில் மதச் சார்பின்மையும், சனநாயகமும் பாதுகாக்கப்படவும், தேர்தல், நீதி மற்றும் ஊடகத் துறைகள் பாரபட்சமின்றி நேர்மையுடன் செயல்பட
- ஆண்டுத் தியானங்கள், சீராய்வுக் கூட்டங்கள் பணியாளர்கள் வாழ்வில் புதுப்பித்தலை உருவாக்க

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- நோய்வாய்ப்பட்டிருக்கும் நற்செய்திப் பணியாளர்களுக்காகச் சிறப்பாகத் தினமும் செபித்தல்.




படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **திருப்பாடல்கள் 2-4 அதிகாரங்களுக்குள்**










**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com